

காங்கேயம் நகராட்சி, வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.9.62 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை கடைகள் மற்றும் வாரச்சந்தை கடைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ராஜாராம், காங்கேயம் நகரக் கழகச் செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், நகர்மன்றத் தலைவர் சூரியபிரகாஷ், நகராட்சி ஆணையாளர் பால்ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 13 ஒன்றிய – நகரங்களில் விளையாட்டுப் போட்டிகள்! பரிசு தொகை ரூ.13 லட்சம்!

# சேலம் மேற்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் - சமூக நீதி திருவிழா!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், ஜன.4–

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் திராவிடப் பொங்கல் – சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் முன்னிட்டு சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட 13 ஒன்றிய–நகரங்களில் நடைபெறும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெரும் அணிகளுக்கு ஒரு ஒன்றிய–நகரத்திற்கு தலா ரூ. 1,00,000/– வீதம் பரிசு தொகை ரூ. 13,00,000/–த்தை மாவட்டக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் என மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி.அறிவித்தார்.



02.01.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் "எடப்பாடியில் உள்ள ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் திரு.பி. தங்கமுத்து அவர்கள் தலைமையில், சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.எம்.செல்வகணபதி அவர்கள் சிறப்புரையில் நடைபெற்ற செயற்க்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

**தமிழர் திருநாள் தைத்திங்கள் தமிழ் புத்தாண்டு!**

"கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தக்குடி நம் தமிழ்குடி என்ற முதுமொழிக்கேற்ப பண்டைய தமிழர்கள் வீரம் செறிந்தவர்களாக நாகரீகத்தோடும், பண்பாட்டோடும்

வாழ்ந்து வருபவர்கள் என்றும், அவர்கள் தைத் திங்கள் முதல் நாளை தமிழ் புத்தாண்டாக கொண்டாடியதை இரண்டாம், மூன்றாம் நற்றிணை,

நூற்றாண்டுகளில் இயற்றப்பட்ட ஐங்குருநூறு, தொல்காப்பியம் போன்ற இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. நாகரீகமற்ற முறையற்ற வாழ்க்கை வாழ்ந்து, ஆடு மாடுகளை மேய்க்க வந்த ஆரியர்கள் சூழ்ச்சித் திறனால் தமிழர்களின் நாகரீகத்தையும், பண்பாட்டையும் அழிக்க முற்பட்டதுடன் தமிழர் திருநாளாம் தைத் திங்கள் முதல் நாளை தமிழர்கள் புத்தாண்டாக கொண்டாடுவதை காலப்போக்கில் அழித்தொழித்தவர்கள். 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய தமிழறிஞர்களான மறைமலையடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு.வி.க போன்றோர் தலைமையில் 500 தமிழறிஞர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி தமிழர் திருநாளாம் தைத்திங்கள் முதல் நாளை தமிழர்களின் புத்தாண்டாக கொண்டாட வேண்டும். என்று தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். மேலும் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துரைத்த பாடலான,

"நித்திரையில் இருக்கும் தமிழா !

சித்திரை அல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு

அண்டிப் பிழைக்க வந்த ஆரியர் கூட்டம் காட்டியதே"

"அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள்

தரணி ஆண்ட தமிழருக்கு

தை முதல் நாளே தமிழ் புத்தாண்டு

– என குறிப்பிடுகின்றார்

மேற்கண்ட தமிழ் ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் தமிழாய்ந்த, உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு கடந்த 2008ம் ஆண்டு தைத் திங்கள் முதல் நாள் தமிழ் புத்தாண்டு என தமிழ்நாட்டின் பெருமையையும், தொன்மையையும், கலாச்சாரத்தை காக்கும் விதமாக உலகத்திற்கு அறிவித்தார்கள். எனவே தமிழர்கள் அனைவரும் தைத்திங்கள் முதல் நாளில் இல்லங்கள் தோறும் வாசலில் வண்ணக் கோலமிட்டு, புத்தாடை அணிந்து, புதுப்பானையில் பொங்கலிட்டு, மனையறம் சிறக்க, மஞ்சள் வைத்து, இனிக்கும் கரும்புடன், இனிப்பு பொங்கல் பொங்கிட, பொங்கலோ பொங்கல் என சிந்து பாடும் இந்த பொங்கல் பொன்னாளில், கிராமங்கள் தோறும் பட்டிதொட்டியெங்கும், நகரங்களில் வட்டங்கள் தோறும் கழகத்தின் இரு வண்ண தோரணங்கள் கட்டி, கழக கொடியினை அவரவர் வீடுகளில் ஏற்றி இனிக்கும் பொங்கல் உடன், இனிய கரும்பு வழங்கி வளம் பொங்கட்டும் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி மாண்பு மிகு தளபதியார் அவர்கள் தலைமையில் நல்லாட்சி தொடரட்டும் என சூளுறை ஏற்று மகிழ்ந்திடுவோம் இந்நன்னாளில்! என சேலம் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நீடாமங்கலம் பேரூர் செயலாளர்

# ஆர்.ஆர். என்கிற ஆர்.ராஜசேகரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*திருவாரூர், ஜன. 4-*

*திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பேரூர் செயலாளர் "ஆர்.ஆர்." என்று அன்போடு அழைக்கப்படும் ஆர்.ராஜசேகரன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த கழக நிர்வாகிகளும் கழக தோழர்களும் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திவருகின்றனர்.*



*மறைந்த ஆர்.ராஜசேகரன் அவர்களுக்கு வயது 77. இவர் 1996 முதல் 2026 இது நாள்வரை நீடாமங்கலம் பேரூர் செயலாளராகவும் , 1996 முதல் 2011வரை நீடாமங்கலம் பேரூராட்சி மன்ற தலைவராகவும் பணியாற்றியவராவார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கைதின்போது நடைபெற்ற ஆர்பாட்டத்தை முன்னின்று நடத்தி 45நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் விவசாய சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற இரயில் மறியல் உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்றவர்.*

*மறைந்த ஆர்.ராஜசேகரன் அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (04.01.2026 ஞாயிற்றுக்கிழமை) நீடாமங்கலம் மோதிலால் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்படுகிறது.*



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதல்களின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 4நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கு, டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் 216 வார்டுகளுக்கும் 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 327 தொகுப்புக்களை பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன் , தாட்கோ தலைவர் நா.இளையராஜா ஆகியோர் வழங்கினர். நகர செயலாளர் வாரை.பிரகாஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் செல்லியம்பட்டி, புலிகரை இருளப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ஏழு புதிய நியாய விலை கடைகளை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ்.நாடாளுமன்ற உறுப்பினர் தி.மு.க. தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி ஆகியோர் திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தனர். உடன் பென்னாகரம் எம்.எல்.ஏ. ஜி.கே.மணி, ஒன்றியச் செயலாளர்கள் ஏ.கருணாநிதி, பி.ஜெ.பச்சையப்பன் மற்றும் இளைஞர் அணி கே.ஆர்.சி.செல்வராஜ்,மாணவர் அணி அன்பரசு மற்றும் கந்தசாமி திலீப் குமார், அருண்குமார், ஆசை தம்பி மற்றும் கூட்டுறவு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! செந்தாமரை பாலு ஏற்பாடு! புதுக்கோட்டை வடக்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜன. 4-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அமைப்பாளர், மாமன்ற உறுப்பினர் செந்தாமரை பாலு ஏற்பாட்டில் ராயல் ஸ்போர்ட்ஸ் அரேனா சொர்க்கம் மின்னொளி அரங்கில் நடைபெற்ற TRUF Cricket போட்டியை புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், இயற்கை வளங்கல் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.



நிகழ்வில் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் சுப. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் இராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன், அரசு வழக்கறிஞர் பூங்குடி எம்.சிவா, விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.அரங்க நாயகம், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.செல்லத்துரை, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி, தமிழ்நாடு அறிவியல் இயக்க புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் வீரமுத்து, புதுக்கோட்டை ரோட்டரி மகாராணி செல்வி, துரைமணி, கீரனூர் ராஜேந்திரசோழன்,

மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம், மாநகர துணைச் செயலாளர் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் மா.மணிவேலன், கறம்பக்குடி ராசி பரூக், தங்கமணி, மாவட்ட மாணவரணி கம்பன் நகர் ரமேஷ், தனபால், கிஷோர், மாணவரணி ராயல் சபா, அற்புத ஹென்றி, வட்ட செயலாளர் கண்மணி சுப்பு, டி.ஆர். குமார் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் கீரை அஸ்ரப் அலி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் வடவாளம் க.செ.மணிமாறன், டி.தயாளன், பாடகர்கள் கந்தர்வகோட்டை முருகையா, இளையராஜா, முத்துமுகமது அன்னவாசல் சண்முகம் உள்ளிட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### திருமானூர் ஒன்றியம் ஏலாக்குறிச்சி பகுதியில் மின் வாரியம் சார்பில்

# ரூ.14.55 கோடி மதிப்பில் 110/22 கிவோ துணை மின் நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்!

அரியலூர், ஜன.4–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் கோட்டத்தில் திருமானூர் பகுதியில் ஏலாக்குறிச்சிக்கு அருகில் உள்ள பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்குவதற்கு புதிய துணை மின் நிலையம் அமைத்திட அடிக்கல்நாட்டி பணியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் முன்னிலை வகித்தினர்.

இத்திட்டத்தின் மூலம் ஏலாக்குறிச்சி பகுதியினை சுற்றியுள்ள ஏலாக்குறிச்சி, கோவிலூர், சின்னப்பட்டாக்காடு, பெரியப்பட்டாக்காடு, கீழஎசனை, செட்டிக்குழி, சுள்ளங்குடி, பெரிய மறை, விழுப்பணங்குறிச்சி, மேலரப்பன்குறிச்சி, கீழவரப்பன்குறிச்சி, அழகியமணவாளம், ராமநல்லூர், மாத்தூர், காமரசவல்லி, செங்க ராயன் கட்டளை, வாண்டராயன்கட்டளை, அரசஞ்சேரி, தேளுர், தூத்தூர், குருவாடி, வைப்பூர், கோமான் உள்ளிட்ட கிராமங்கள் பயன்பெறும். இப்பகுதியில் உள்ள 12,000 மின் நுகர்வோர்களுக்கு சீரான மின்சாரம் வழங்குகின்ற வகையில் அமையவுள்ள 110 கிவோ ஏலாக்குறிச்சி துணை மின்நிலையம் ஏறத்தாழ 9.19 கி.மீ தூரம் வரை மின்சாரம் வழங்கப் பட உள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் நிலவி வந்த குறைந்த மின்னழுத்தம் என்ற பிரச்சனை சரிசெய்யப்படும். இப்பகுதியில் உள்ள மின் நுகர்வோர்கள் எந்தவித பிரச்சனையுமின்றி மின்சார பயன்பாட்டினை பெறும் வாய்ப்பு கிடைக்கப்பெறவுள்ளது. இப்புதிய துணை மின் நிலையமானது ரூபாய் 14 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் அமையவுள்ளது. அதன்படி 10 கி.மீ தூரத்திற்கு 110 கிவோ மின்பாதைகள் அமைக்கப்படவுள்ளது. ஏலாக்குறிச்சி பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு இதன் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு மின்சாரத் துறையானது பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற இலவச மின்சார இணைப்பானது நீண்ட நாட்களாக காத்திருந்த சுமார் 1.50 இலட்சம் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று தமிழ்நாடு முழுவதும் எங்கெல்லாம் குறைந்த மின்னழுத்த பிரச்சனைகள் ஏற்படுகிறதோ அப்பகுதிகளில் பதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதாக இருந்தாலும், புதிய மின்மாற்றிகள் அமைப்பதாக இருந்தாலும் அவை அனைத்தும் தொடர்ந்து அமைக்கப் பட்டு வருகிறது. பெரம்பலூரில் இருந்து குன்னம் தனி கோட்டமாக பிரிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டம் செந்துறை பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற செந்துறை 110 கிவோ தரம் உயர்த்துகின்ற அலகு இப்பொழுது அனுமதி வழங்கப் பட்டுள்ளது. புதிய மின் நிலையங்கள் அமைப்பதற்கு சிலால், கல்லாத்தூர், பிலாக்குறிச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் கொளக்காநத்தம் போன்ற பகுதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஏலாக்குறிச்சியில் இன்றையதினம் துவங்கி வைக்கப்பட்டுள்ள துணை மின் நிலையத்திற்கான பணிகள் விரைவில் நிறைவடைந்து துணை மின் நிலையம் அமைந்து இப்பகுதியில் உள்ள மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்படும்.

மின்சார கட்டமைப்பானது பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களில் மின்சார வசதிகளே இல்லாத பகுதிகள் கூட இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் மின்சார வசதி இல்லாமல் எந்தவொரு கிராமப் பகுதிகளும் இல்லை எனும் அளவுக்கு ஒரு திட்டத்தை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றினார்.

அனைத்து மின் இணைப்புகளும் விண்ணப்பித்து உடனுக்குடன் வழங்குகின்ற அளவிற்கு தமிழ்நாடு இருக்கிறது. அனைத்து துறைகளிலும் மிகச்சிறப்பாக செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட்,கும்பகோணம் நிர்வாக இயக்குநர் க.தசரதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் சதீஸ்குமார், மின்சாரத்துறை மேற்பார்வை பொறியாளர் பெரம்பலூர் மேகலா, மின்சாரத்துறை செயற்பொறியாளர் அரியலூர் அய்யனார், போக்குவரத்துக் கழக கோட்ட மேலாளர்,துணை மேலாளர் ராம்குமார், பெரம்பலூர், திருவையாறு கிளை மேலாளர் சரவணன், அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, அசோகசக்ரவர்த்தி, மா.அன்பழகன், ஏ.ஜி.எஸ். முருகன்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், வின்சென்ட் ராஜா, செல்வ.பிரபாகரன், எஸ்.ஆர்முருகேசன், இலக்கியதாசன், தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) பணிமனை நிர்வாகிகள் தேர்தல் இறுதி வேட்பாளர்கள் பட்டியல் 03.01.2026 அன்று வெளியிடப் படுவதாக 25.12.2025 அன்று அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தொடர் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாலும், தொடர்ந்து பண்டிகை காலமாக இருப்பதால் பேருந்துகள் இயக்கம் பாதிக்கப்படாமலிருப் பதற்காகவும் மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாக தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளதால் 24.01.2026 அன்று இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும்.

தேவைப்படின் பணிமனைகள் தோறும் வாக்குப் பதிவு 31.01.2026 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **மு.சண்முகம் EX.MP** |
| சென்னை 17. | பொதுச் செயலாளர் |
| நாள் :01,01.2026. | தொ.மு.ச. பேரவை |



நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக அலுவலகம் மற்றும் வேளாங்கண்ணி பேரூர் கழக அலுவலகத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன் திறந்து வைத்தார்.உடன் கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பேரூராட்சி தலைவர் டயானாஷர்மிளா, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பி.டி. சார்லஸ், மாவட்ட பிரதிநிதி மு.ப.ஞானசேகரன், இராம.இளம்பரிதி, நரசிம்மன், ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பிரமணியன், அருள், செந்தில், ரவி, பூவை ஆர்.ஜி.முருகு, அனுசியா ஜோதி பாசு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ரெக்ஸ் மற்றும் பலர் உள்ளனர்.




கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் தலைமையில் சூளகிரியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் மாதேஸ்வரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ஞானசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பாசர்வேஷ், பொருளாளர் சுகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.